அரசாங்கம் இந்த ஆண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? அந்த 600 பேர்களுக்கும் கொடுப்பதற்கு அரசாங்கம் மறு பரிசீலனை செய்து முடிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நிச்சயமாக பரிசீலிக்கும்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு குமுளியில் பணிமனை கட்டும் திட்டம்

*வினா எண். 1078. திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமுளியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் நிற்பதற்கு டிப்போ கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

பாண்டியன் சாலைப் போக்குவரத்து கழகத்திற்குச் சொந்தமான பணிமனை ஒன்று ஏற்கெனவே குமுளியில் உள்ளது. அங்கு ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஒன்று மேற்படி கழகத்தின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ஆர். டி. கோபாலன்: அங்கே பல்லவன் டிப்போ முதலில் இருந்தது. அதை இப்பொழுது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எடுத்துள்ளது. ஆனால் அங்கே பேருந்துகள் நிற்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. ஆகவே அந்தப் பேருந்துகள் நிற்பதற்கு வேண்டிய வசதிகள், ஏற்பாடுகள் செய்து கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பாண்டியன் போக்குவரத்துக் கழகம் சார்பாக அங்கே ஒரு பணிமனை இருக்கிறது. அதில் 11 பேருந்துகள் இப்போது நிற்கின்றன. ஆனால் பயணிகளை ஏற்றுவதற்காக நிறுத்தப்படுகிற பஸ்கள்—பஸ் ஸ்டாண்ட் இல்லை என்ற காரணத்தால் இப்போது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அதற்காக பணத்தை ஒதுக்கி ஏறக்குறைய ஐந்து ஏக்கர் நிலம் அதற்கு தேவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டிருக்கிறது.

அரசுப் பேருந்துகளில் அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்லுவதை தடுக்கும் திட்டம்

வினா எண். 1015—திரு. த. வேணுகோபால்: மற்றும் திரு. இரா. தமரைக்கனி:— மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1981 மே 12

அரசு பஸ்களில் ஓவர் லோடு ஏற்றுவதை தடுக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அனுமதிக்கப்பட்ட பயணிகளுக்கு மேல் பேருந்துகளில் ஏற்றிச் செல்லக் கூடாது. இதனை மீறினால் மோட்டார் வண்டிகள் சட்டம் 60 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து உரிமத்தினை கான்சல் செய்யவோ அல்லது தற்காலிக நீக்கம் செய்யவோ போக்குவரத்து அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்க விதி செய்யப் பட்டுள்ளது. விழாக் காலங்கள் மற்றும் பண்டிகை நாட்களில் அனுமதிக்கப்பட்ட பயணிகளுக்கு மேல் குறிப்பிட்ட பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அனுமதியளிக்கவும் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவற்றை மீறி, அதிக பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகளை போக்குவரத்துத் துறை அலுவலர்கள் மூலமாக தணிக்கை செய்து அவர்களின் சோதனை அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: அரசாங்கப் பஸ்களில் ஓவர்லோடு ஏற்றி வசூல் செய்த தொகையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரசுக்குக் கட்டியிருக்கிறார்களா? அப்படிக் கட்டாதவர்கள் மீது எவ்வளவு பேர்கள் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஓவர்லோடு போடுவதன் மூலம் வருகிற வருமானத்தை அரசாங்க அதிகாரிகள் வசூலிப் பதற்கு எந்த அதிகாரமும் இல்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு இருக்கிற உரிமத்தை ரத்து செய்யலாமே தவிர அந்தப் பணத்தை வசூல் செய்யமுடியாது. நீதிமன்றங் களுக்குப் போகிறபோது அவர்களுக்கு வேண்டுமானால் அங்கே அபராதம் என்ற முறையில் விதிக்கப்பட்டு அது வசூலிக்கப் படுகிறது. அதிகாரிகள் நேரடியாக வாங்கமுடியாது, வாங்கினால் தவறுகள் ஏற்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மோட்டார் வாகன ஆய்வாளர்களும் ஆர்.டி.ஓ.க்களும் அரசாங்கப் பேருந்துகளில் ஓவர்லோடு ஏற்றினால் கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் தனியார் பஸ்களில் ஓவர்லோடு போடுவதை அனுமதிக் கிறார்கள். அதற்கும் கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதிகாரிகளைப் பொறுத்தவரை நாம் எந்தப் பேருந்துகளிலும் ஓவர்லோட் ஏற்றக்கூடாது என்று தகவல் கொடுத்திருக்கிறோம். அதிக எண்ணிக்கை இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

1981 மே 12]

அதிலே, அரசாங்கப் போக்குவரத்துக் கழகத்தை விட்டு விடுவதில்லை. அரசாங்க போக்குவரத்து என்ற அடிப்படையிலே அதிக நடவடிக்கையும் எடுக்கக்கூடாது. சரிசமமான நடவடிக்கை எடுக்கப்படுவதாக தகவல் வந்து கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இந்த அரசு பஸ்களில் ஓவர்லோட் சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட கொள்கையை வைத்திருப்பதாக அமைச்சர் சொன்னார். நான் கேட்க விரும்புவதெல்லாம், இந்த ஓவர்லோட் சில பகுதிகளிலே கடுமையாக்க வேண்டியிருக்கிறது; சில பகுதிகளிலே அதற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. மலைப் பிரதேசங்களைப் பார்க்கும்போது கண்டிப்பாக ஓவர் லோட் இருக்கக் கூடாது என்பதை உறுதிப்படுத்தவும் சில ஊர்களுக்கு போக்குவரத்து வசதியற்று இருக்கும் ஊர்களுக்கு, பொதுமக்கள் கடைசி பஸ்களில் போகவேண்டியிருப்பதால், அவர்களை ஓவர் லோட் இருந்தாலும் அனுமதிக்கும்படியான கொள்கையை அரசு அனுஷ்டிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நாம் ஒரே ஒரு கருத்திற்கு இரு வேறு கொள்கையைக் கொண்டு வர முடியாது என்று சொன்னாலும், நடைமுறையில் பல இடங்களில் அப்படித்தான் வைத்திருக்கிறோம். சட்டப்படி ஓவர்லோட் ஏற்றக்கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்தாலும், பல இடங்களில் பொதுமக்கள் ஏறிக் கொண்டால், அதைத் தடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆனால், மலைப்பாங்கான பகுதிகளில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஓவர்லோட் ஏற்றுவதில்லை. ஏறினாலும் நடத்துனர்கள் அதை அனுமதிப்பதில்லை.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, சிடி பஸ்களில் ஓவர்லோட் ஏறுவதால், நடத்துனர்கள் டிக்கட் கொடுக்க முடியாத நிலையில், சில நேரங்களில் அவர்கள் *** ஆக்கப்பட்டு, பணிநீக்கம் செய்யப்படுகிறார்கள். அந்தக் குறையைப் போக்க அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியபடி, அவர்கள் ஓவர்லோட் ஏற்றவேண்டுமென்ற உணர்வோடு செய்வதில்லை. அங்கு வருகின்ற பொதுமக்கள் உடனடியாகப் போகவேண்டுமென்ற காரணத்தினால், வேறு பேருந்து வருகின்றவரை பொறுத்திராமல், அதிலேயே ஏறவேண்டுமென்ற நிலை ஏற்படுவதன் காரணமாக, அப்பேர்ப்பட்ட குறைகள் பல இடங்களிலே நடக்கிறது இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆகவே, இந்தக் குறையைப் போக்குவதற்குத்தான் பேருந்துகளில் இரண்டு நடத்துனர்கள் வேண்டுமென்ற முறையையும், அதேபோன்று அதிகமான

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க் அகற்றப்பெற்றது.

[1981 மே 12

பேருந்துகள் விடுகின்ற ஏற்பாட்டையும் நாம் நடைமுறையில் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் இதற்கு முடிவுக்கான திட்டம் போட்டு, செயலாற்றிக் கொண்டிருக்கிறோம்.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் நிலையங்களில் அரசு பஸ்களும், தனியார் பஸ்களும், ஒன்றாக போக்குவரத்து வேலைகளைச் செய்கின்ற காரணத்தினால், தனியார் பஸ் முதலாளிகள் புரோக்கர் என்று சொல்லக்கூடிய ஆட்களை நியமித்து, அரசு பஸ்களில் பயணிகள் ஏறாமல் தடுத்து வருகின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலைமை பேருந்து நிலையங்களில் இல்லாமல், அவர்களை வெளியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? உதாரணமாக, வேலூர் பஸ் நிலையத்திலே இப்படிப்பட்ட நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, புரோக்கர் என்று வைத்துக் கொண்டு, வருகின்ற பயணிகளை எந்த வண்டியில் போய் ஏற வேண்டுமென்று சொல்வதற்காக வைத்திருக்கிறார்கள். அதைத் தடுக்க முடியாது. ஆனால், நம்முடைய பேருந்துகளில் ஏறுவதைத் தடுப்பார்கள் என்று சொன்னால், கடுமையான நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக்கிறது. அதை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய நடத்துநர்கள் அப்படி விடுவதில்லை என்ற தகவல் இருக்கிறது. எனவே, தனியாக அதைப்பற்றித் தகவல் சொன்னால், நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** ஆக்கப்பட்டு என்று உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் பேசும்போது சொன்ன வார்த்தையில் *** என்பதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்.

*வினா எண். 1016—திரு. சி. கோபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.